DEPOSITION OF WITNESS
Judicial Form No. 53
(See Rule 42)
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | CC 313/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | P.W. 1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் | : | வலுப்பூரான் | ஜாதி | : | |
| கிராமம் | | கவுண்டம்பாளையம் | இனம் | : | |
| தாலூக்கா | : | காங்கேயம் | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 06.02.2026

**Accused present.**

**முதல் விசாரணை**

ஆஜர் எதிரி தனது கணவர். எங்களுக்கு மகேஷ்வரி, சத்தியா, புவனேஷ்வரி என்று மூன்று மகள்களும், பெருமாள் என்ற மகனும் உள்ளனர். மகேஸ்வரிக்கும் சத்தியாவிற்கும் திருமணம் முடிந்துவிட்டது. மகேஷ்வரி திருப்பூரில் குடியிருந்து வருகிறார். சத்தியா ஊதியூரில் உள்ள சமத்துவப்புரத்தில் இருந்து வருகிறார். கடந்த 2023 ம் வருடம் கவுண்டம்பாளையத்தில் உள்ள எங்களது வீட்டில் நான் மதிய வேலையில் இருந்தபோது எனது கணவர் என் மீது சந்தேகம் கொண்டு நீ அவன் கூட போனீயா, இவன் கூட படுத்துக்கிட்டு இருந்தியா என்று கேட்டு பேசினார். மேலும் எனது மருமகன் உடன் சம்மந்தப்படுத்தி தகாத வார்த்தைகளால் பேசினார். எதற்கு இப்படி பேசுகிறீர்

என்று கேட்டதற்கு இப்படித்தான்டி பேசுவேன் என்று சொல்லி என்னை கையால் அடித்தார். இதனால் நான் வீட்டிற்குள் சென்று கதவை சாத்திக்கொண்டேன். பினனர் எனது கணவர் வீதியில் நின்று கையில் அரிவாளை வைத்துக்கொண்டு வெளியே வாடி உன்னை உயிரோடு விடமாட்டேன் என்று மிரட்டினார். உடனே நான் எனது இரண்டு மருமகன்களுக்கும், மகள்களுக்கும் தகவல் சொன்னேன். எனது சின்ன மருமகன் திவாகர் 2 மணி நேரம் கழித்து சம்பவ இடத்திற்கு வந்தார். அதன்பிறகு பெரிய மருமகன் வேலுச்சாமியின் சம்பவ இடம் வந்துவிட்டார். அவர்கள் வந்தவுடன் எனது கணவர் அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் எனது கணவர் மீது ஊதியூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அந்த புகாரில் உள்ள கைரேகை என்னுடையதுதான் . **புகார் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தனர்.

__குறுக்கு விசாரணை__

புகாரை எனது மகள் புவனேஷ்வரி எழுதினார். போலீஸ் சொல்ல சொல்ல புவனேஷ்வரி எழுதினாரா என்றால் இல்லை. புவனேஷ்வரி எழுதி பின்னர் போலீசாரிடம் கொடுத்தார். எத்தனை நாட்கள் கழித்து புகார் கொடுத்தீர்கள் என்றால் 3 நாட்கள் கழித்து புகார் கொடுத்தேன். எங்கள் வீடு அருகே நிறைய வீடுகள் உள்ளதா என்றால் ? உள்ளது. சம்பவத்தின் போது அக்கம்பக்கம் உள்ள நபர்கள் யாரும் வரவில்லை என்றால் யாராவது வந்தால் அவர்களையும் எனது வீட்டுக்காரர் தகாதவார்த்தையால் பேசுவார். அதனால் யாரும் வரமாட்டார்கள். சின்ன மருமகன் மட்டும் சமத்துவபுரத்தில் குடியிருக்கிறார். சம்பவத்தன்று வீட்டில் யாரும் இல்லை என்றால் ? சரிதான். நான் குடியிருக்கும் வீட்டில் இருந்து சமத்துவபுரம் 3 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தின் போது எனது கணவர் சம்பவ இடத்திற்கே வரவில்லை என்றால் சரியல்ல. எனது மருமகன்களுக்கு எனது கணவரை பிடிக்காத காரணத்தினால் பின் யோசனையின் பேரில் அவர்களின்

அறிவுறுத்தலின் படி எனது கணவர் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

D THENMOZHI

Digitally signed by D THENMOZHI
Date: 2026.02.06 18:44:13 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.